www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
# Thamil Eelam Liberation Organization

TELO

## எமது வேண்டுகோள்!

1983ம் ஆண்டு ஜூலையில் எமது இயக்கத்தின் முன்னோடிகளான தலைவர். தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் மற்றும் 52 போராளிகள் வெலிக்கடைச்சிறையில் கோரமான முறையில் சிங்கா பேரினவாதிகளால் படுகொலைசெய்யப்பட்ட "கறுப்பு" நாளின் நினைவாக உலகமெங்கும் வாழும் தமிழர்கள் துக்கம் அனுஷ்டிக்கும் இவ் வேளையில் இவ்வரலாற்று நினைவுயிக்க துக்க அநியாயத்தை தொடர்ந்து விடுதலைப்போராளிகள் என்ற போர்வையில் இயங்கும் அராஜக வாதிகளின் கொடுமைக்கு தமிழீழத்தின் இன்னொரு தலைவன்சிறீ சபாரத்தினம் அவர்களையும் இதர நூற்றுக்கணக்கான உடன்பிறப்புக்களையும் பலி கொடுத்துள்ளோம்.

விடுதலையின் பேரால் நடந்த இக்கொடுமையைத் தொடர்ந்து இன்னும் பலர் இவர்களின் கொடிய கரங்களிலே சித்திரவதைக் கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர். இதில் தோழர். மோகனும் ஒருவராவர்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நாம் போராடிவந்த காரணத்தாலும், எமது நடவடிக்கைகள் சிறீலங்கா கூலிப்படைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வந்த காரணத்தாலும் கூலிப்படைகளின் நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டன.

இன்று வடபகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகக் கூறி எமது இயக்க நடவடிக்கைகளை துப்பாக்கி முனையில் நிறுத்த முயற்சிகளை மேற்கொள்ளும் இவர்களின் இவ் அடாவடித்தனங்களால் தமிழ் மக்கள் மேலும் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூலிப்படைமுகாம்கள் புதிதாக 16 இற்கு மேல் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் கூலிப்படை முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகள் பாதுகாப்பு வலையங்களாக பிரகடனப்படுத்தப்பட்டதால் இதுவரை 150,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான முகாம்கள் அமைக்கப்பட்டதால் பொதுவாக தமிழ்மக்கள் கூலிப்படைகளால் சூழப்பட்ட நிலமையிலேயே வாழ்ந்து வருகிறார்கள். பீரங்கித் தாக்குதலின் எல்லைக்குள் வாழ்வதால் மக்கள் தினசரி பதுங்கு குழிகளுக்குள் வாழ்ந்து வருகிறார்கள்.

போதுமான ஏற்பாடுகள் இல்லாமல் கடந்த மாதம் கிளிநொச்சி கூலிப்படை முகாமைத்தாக்கியவர்கள் (L.T.T.E) தாக்குப்பிடிக்க முடியாமல் யாழ்ப்பாணப் பொறுப்பாளரிடம் உதவியைக் கோரினர். யாழ்ப்பாணப் பொறுப்பாளர் மறுத்ததால் (கிட்டு) போராளிகள் 27 பேரை அநியாயமாக இழந்ததோடு, கிளிநொச்சிப் பகுதியிலிருந்த பாரிய குளத்தையும் உடைத்தனர். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி ஓடினர். சரியான போராட்ட தந்திரம் இல்லாமல் முரட்டுத்தனமான போக்கினை தொடர்ந்தும் கையாள்வதால் சக போராளிகளை அநியாயமாக பலிகொடுத்து வருவதோடு அப்பாவிமக்களையும் அகதிகளாக்கி வருகின்றனர்.

இவர்களின் இத்தகைய நடவடிக்கைகளை மக்கள் கண்டித்து வருவதோடு ஆங்காங்கே துண்டுப்பிரசுரங்களையும் வெளியிடத் தவறவில்லை.

வடபகுதியிலுள்ள இஸ்லாமியர்களின் கோஷ்டித் தகராறினைத் தீர்க்கச் சென்றவர்கள் அவர்களில் இருவரை சுட்டுக்கொன்று நியாயம் வழங்க முயற்சித்துள்ளனர். சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும் துப்பாக்கி மூலமே தீர்க்க முயற்சிக்கும் காட்டுமிராண்டித்தனமான போக்கு விடுதலைப் போராட்டத்தில் கறைபடிந்த அத்தியாயமாகி வருகிறது. துப்பாக்கிக்கான இலக்குகளுக்கு வரையறையில்லாததால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்பேசும் மக்களில் ஒருபகுதியினராகிய இஸ்லாமிய மக்கள் விடுதலைப்போராட்டத்தில் வெறுப்படைவதோடு ஒற்றுமைக்கான சூழ்நிலைகளும் அருகி வருகின்றன.

இவ்வாறு இயக்கத்திற்குள் முரண்பாடான குழறுபடியான போக்குகளையும், அரசியல் ரீதியான அணுவகுமுறையற்ற ,பிற்போக்குத்தனமான தனிநபர் வழி பாட்டினையும் வளர்த்துவரும் இவர்கள் இதர இயக்கங்களையும் தொடர்ந்தும் துப்பாக்கிகளைக் காட்டி பயமுறுத்தி வருவது அரசியல் அநாகரீகம் என கூற விரும்புகிறோம்.

ஒரே இயக்கம் தான் இயங்கவேண்டுமென உளறுவது போலித்தனமான வாதமே. மக்கள் வெவ்வேறு இயக்கங்களுக்குப் பின்னால் அணிதிரண்டு வரும் இவ்வேளையில் இயக்கங்களை அழிக்க என்னுவது மக்களை அழிக்கும் எண்ணப்போக்குக்கு ஒப்பானதாகும்.

கபடத்தனமான, சூழ்ச்சி வழியில் செல்லும் அரசியல் போக்கினை மனதில் வைத்துக்கொண்டும், நாளுக்கு நாள் முரண்பாடான செய்திகளை வெளியிட்டுக்கொண்டும் அரசியல் தலைமையைக் கைப்பற்ற நினைப்பது மக்களை மந்தைக் கூட்டமென என்னும் மனப்பாங்கை ஒத்ததாகும்.

மக்கள் தினமும் விழிப்படைந்து வருகிறார்கள். இதனால் விடுதலை இயக்கங்கள் புதிய நிலமைக்கு எற்றவாறு தம்மைத்தயார்ப்படுத்தி, புதிய ஜனநாயக பரிமாணத்தை பெற்று வருகின்றன.

---

**எனவே சகல பிரச்சனைகளையும் துப்பாக்கி குழலினூடாக மாற்றும் எண்ணப்போக்கினை மாற்றி, ஒரே தலைமை என்ற போர்வையில் மேற்கொள்ளும் சூழ்ச்சி அரசயலை கைவிட்டு ஜனநாயக வழியில் பிரச்சனைக்கான தீர்வினை மேற்கொள்ள சகல சக்திகளும் ஓர் பொது அமைப்பில் இணைந்து கொள்ள வேண்டுமென வேண்டுகிறோம்.**

தமிழ்பேசும் மக்களுக்காக தமது இன்னுயிரை ஈந்த எமது இனிய தலைவர்கள் மறைந்த இத்தினத்தில் வீரசபதம் ஒன்றினை மேற்கொள்ள சகல விடுதலைப்போராளிகளும் முன்வர வேண்டுமென வேண்டுகிறோம்.

இவ்வாறான முன்னணி ஒன்றினை அமைக்கும் பணியில் தேசபக்திமிக்க ஆர்வமுள்ள சகல மக்களையும் ஈடுபடுமாறு வேண்டுகிறோம்.

இப்புனித பணியை மேற்கொள்ளும் வகையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தோழர். மோகன் உட்பட சகல தோழர்களையும் எந்த நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை கோருகிறோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

**We Teloists give our revolutionary salute to all the 'martyrs' who have given their lives for freedom and liberation of the exploited and the oppressed masses of the world**

## Thamil Eelam Liberation Organization

**LONDON**

**27-07-86**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்